முதல் 15—1—1971 வரை தேசிய புத்தக வெளியீட்டு நிறுவனம் நடத்திய புத்தகக் கண்காட்சியில் கலந்துகொண்டது. தமிழ்நாடு பாடநூல் வெளியீட்டுக் கழகம் வெளியிட்ட 150 வெளியீட்டு நகல்கள் பார்வைக்கு வைக்கப்பட்டன.

Tamilnadu Librarians' Association

* 30 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that the Tamilnadu Librarians' Association has requested the Government during March, 1971 to appoint a State Level Committee consisting of experienced Librarians to go into the question of all important matters connected with Library administration and Service conditions of employers working in Libraries; and

(b) if so the action taken by the Government in the matter?

தமிழ் நாடு நூலகர் சங்கம்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) நூலகங்களில் வேலை பார்க்கும் ஊழியர்களின் பணி சம்பந்தமாகவும் நூலக நிர்வாகம் சம்பந்தமாகவும் உள்ள எல்லா முக்கியப் பிரச்சினைகளையும் ஆலோசனை செய்து பார்ப்பதற்கென, அனுபவம் பெற்ற நூலகர்கள் அடங்கிய மாநில மட்டக் குழு ஒன்றை அமைக்குமாறு தமிழ் நாடு நூலகர் சங்கம், 1971 மார்ச் திங்களில் அரசிடம் முறையிட்டுள்ளது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(ஆ) 1950-ஆம் ஆண்டு தமிழக பொது நூலக விதி 2 (1) பிரிவின்படி அமைக்கப்பட்டுள்ள மாநில நூலகக் குழு, நூலக நிர்வாகம் குறித்து அவ்வப்போது அரசுக்கு அறிவுரை கூறி தமிழக பொது நூலகச் சட்டம் 1948-ல் உள்ள சட்டப் பிரிவுகளை நடைமுறைப்படுத்த உதவிவர தமிழ்நாடு பொது நூலக விதி 1950, 7-வது பிரிவில் இடமிருப்பதாலும், நூலகப் பணியாளர்களின் பணிவரையறைகள், நூலக நிர்வாகம் ஆகியவற்றை கவனிக்க தமிழக நூலக பணியொன்றினை ஏற்படுத்துவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருவதாலும், இவை குறித்து இனி தனியொரு குழு நியமிக்க அவசியமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: துணைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழக மானியக் குழுவும் சென்னை அரசும் இந்த நூலகங்களுக்காக பணத்தை நிறைந்த அளவில் ஒதுக்கீடு செய்தாலும் கூட, கல்லூரியில் இருக்கிற நூலகங்களில் புத்தகங்களை வாங்கி

வைக்கிறார்களே தவிர, தகுதி பெற்ற நூலக அதிகாரிகள் இல்லாததால், புத்தகங்கள் அலமாரிக்குள்ளேயே இருக்கின்றன. சில கல்லூரிகளில் நூலகங்கள் லாபரட்டரிகளாகவும், வகுப்பு அறைகளாகவும் இருக்கின்றனவே தவிர, லைப்ரரியாக இல்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்ததா? அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றிய விவரக் குறிப்பில்லை. நூலகங்கள் இருந்தால், அவை பயன்படுகிற அளவிற்கு அமைந்திருக்க வேண்டும். அப்படி அமையாமல் குறைபாடுகள் இருந்தால், அது அரசின் கவனத்திற்கு வந்தால், கவனித்து தக்க நடவடிக்கை எடுக்க முயலலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Provident Fund Accounts

* 31 Q.—THIRU G. SWAMINATHAN and THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have passed orders requiring the managements of High Schools to contribute to the Provident Fund Accounts of the Non-teaching staff from 1st April 1964; and

(*b*) if so, the reasons therefor?

வருங்கால வைப்பீட்டு நிதிக் கணக்கு

திரு. ஜி. சுவாமிநாதன் & திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) 1-4-1964 முதல் கொண்டு ஆசிரியரல்லாத பணியாளர்களின் வருங்கால வைப்பீட்டு நிதிக் கணக்கில் தொகை கொடுக்க வேண்டுமென உயர்நிலைப் பள்ளிகளின் நிர்வாகிகளுக்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளதென்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

THIRU G. SWAMINATHAN: After 1st April 1964, the Managements of many schools are refusing to pay the amount of 3 P. on behalf of the non-teaching staff. Will the Government issue a clarification saying that the Managements should contribute to the Provident Fund of the non-teaching staff, because there is confusion and I have also received complaints from many districts that the Managements are refusing to pay their contribution to the Provident Fund?